# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:19 நவம்பர் 2019 Vol.5 Issue : 19 November 2019





சி.சாவித்ரி
ஷா. முஹம்மது அஸ்ரின்
ல.கு.சு.இராஜ்குமார்
ப.ராகசுதா
சி.விஜயன்
ம.செந்தில்குமார்

மு.கயல்விழி
SINNATHAMBY LAVAPRIYAA
கி. ஜெகதீசன்
செ. பிரவீன்

அ.சு. செல்வரமேஷ்
பெ. விஜயகுமார்
ஜூ.மரியா செபாஸ்டின்
மு. வையாபுரி
த.சத்தியராஜ்

**Inam** ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
*International E-Journal of Tamil Studies*


## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)



**இதழாக்கமும் வெளியீடும்**
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364


நவம்பர் 2019 மலர் : 5 இதழ் : 19
*November 2019 Volume V Issue 19*

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்


**தொல்காப்பியம் - தெலுங்கு மொழிபெயர்ப்பு**
**Tolkappiyam - Telugu Translation**
முனைவர் சி.சாவித்ரி/Dr.Ch.Savithri | 4

**பெரும்பாணாற்றுப்படையில் பழந்தமிழரின் உணவுகள்**
**Foods of ancient Tamizhar in Perumpaanaatrupadai**
ஷா. முஹம்மது அஸ்ரின் / S.Mohamed Azrin | 12

**சங்க இலக்கியத்தில் தாயும் சேயும்**
**Mother and Child in the Sangam literature**
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 19

**குறுந்தொகை - நெஞ்சொடு கிளத்தல் : உளவியல் பார்வை**
**The Psychological View of Heartful Lament in Kurunthokai**
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 25

**பத்துப்பாட்டில் ஆடை**
**Clothing in Paththuppattu**
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30


### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**காவிரிப் படுகையில் அருகி வரும் உம்பளாச்சேரி எருதுகளின் எண்ணிக்கையும், அதன் பயன்பாடுகளும்**
**Declining of Trend of Umblachery Bullocks in Numbers and Its Utility in Cauvery Delta Zone**
கி. ஜெகதீசன்/K.Jagadeesan, செ. பிரவீன் /S.Praveen /அ.சு. செல்வரமேஷ் /A.S. Selvaramesh, பெ. விஜயகுமார்/P. Vijayakumar, லூ.மரியா செபாஸ்டின்/L.Maria Sebastin | 34

**பல்லவர் கால வரிவிதிப்பு முறை**
**Pallavas Taxation method**
மு.கயல்விழி/M.kayalvizhy | 37


...

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

## ADVISORY TEAM

*Dr.S.V.Shanmugam (Chidambaram)*
*Dr.S.Rajaram (Nagarkovil)*
*Dr.Silambu.N.Selvarasu (Pondichery)*
*Dr.N.Veluchamy (Salem)*
*Sri S.SriKantharasa (Australia)*

## Editorial Team

*Dr.A.Mani (Pondichery)*
*Dr.G.Balaji (Coimbatore)*
*Dr.R.Gunaseelan (Coimbatore)*
*Dr.N.Rajendran (Coimbatore)*
*Dr.R.Raja (Trichy)*
*Dr.B.Sivamaruthi (Thailand)*
*Dr.S.Muthuselvam (Madurai)*
*Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)*
*Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)*



**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**ஞானபோதினி இதழில் தமிழியல் ஆய்வுகள்**
**Tamil Research through Jounals: Gnanapothini (1897-1903)**
முனைவர் மு. வையாபுரி/Dr.M. Vaiyapuri | 48

**அறிவைக் கட்டமைப்பதிலும், அறிவை மீள் உருவாக்கம் செய்வதிலும் ஆய்வாளர்களின் வகிபங்கு**
**The role of researchers in the construction of knowledge and the reconstruction of knowledge**
சின்னத்தம்பி லாவபிரியா/Sinnathamby Lavapriyaa | 61

**ஒப்பும் மீக்கருத்தியலும்**
**(தமிழ் - தெலுங்கு இலக்கணப் பனுவல்களின் இரண்டாம் வேற்றுமை கருத்தியல்களை முன்வைத்து)**
**Oppum mīkkaruttiyalum (tamil̲ - teluṅku ilakkaṇap pan̲uvalkaḷin̲ iraṇṭām vēr̲r̲umai karuttiyalkaḷai mun̲vaittu)**
சத்தியராஜ் த. / Sathiyaraj T. | 71


...

மதிப்பிடப்பெற்றது

# குறுந்தொகை – நெஞ்சொடு கிளத்தல் : உளவியல் பார்வை

## The Psychological View of Heartful Lament in Kurunthokai

ப.ராகசுதா/B.Ragasudha[5] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[6]

**Abstract:** Literature is the expression of life. The human mind focuses on the functions of the mind. Each writer's work is a reflection of his own internal experiences. Various studies have been performed in the Sangam literature. These depict the human mind's thoughts, mental processes, and human behavior changes in different situations. "The inner life of man becomes the theme of literature," he says. (Y. Sachidanandan, p.199).

**Key Words:** Depict, Human, Mind's Thoughts, Mental Processes, Behavior

இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு. மனித மன எண்ணங்களை மனத்தின் செயல்பாடுகளை மையமாகக் கொண்டது. ஒவ்வொரு எழுத்தாளனின் படைப்பும் அவனது அகமன அனுபவங்களின் பிரதிபலிப்பாகும். "மனிதனின் அக வாழ்க்கையே இலக்கியத்தின் கருப்பொருளாகிறது" என்கிறார் (வை.சச்சிதானந்தன், ப.199).

சங்க இலக்கியங்களில் பல்துறை ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவை மனித மனதின் எண்ண ஓட்டங்கள், உளச்சிக்கல்கள் பல்வேறு சூழல்களில் வெளிப்படும் மனித நடத்தை மாறுபாடுகள் போன்றவற்றைச் சித்தரிக்கின்றன.

பிரிவுத்துயரத்தினால் அகமாந்தர் தனிமையில் தன் நெஞ்சிற்குக் கூறும் நிலை நெஞ்சொடு கிளத்தலாகும். நெஞ்சொடு கிளத்தலில், நெஞ்சுக்குக் கூறுபவரின் நனவுமனச் செயல்பாடுகளும், நனவிலி மன உணர்வுகளுமே ஒன்றுக்கொன்று எதிர்கொள்கின்றன.

குறுந்தொகையில் நெஞ்சொடு கிளத்தல் தன்மையில் அமைந்த பாடல்களில் வெளிப்படும் தலைவனின் மனச்செயல்பாடு உளப்பகுப்பாய்வு நோக்கில் இங்கு விளக்கப்படுகிறது.

### நெஞ்சொடு கிளத்தலும் உளவியலும்

பிரிவுத் துயரத்தினால் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் தன்மையாதலின் நெஞ்சொடு கிளத்தல் எனப் பொருள்படும். தொல்காப்பியர் நெஞ்சொடுகிளத்தல் ஒரு கூற்றுவகை என்பார். இங்குக் கூறுபவர் – மாந்தர். நெஞ்சு கேட்போர் என்ற நிலையில் கேட்கும் பொருள் ஆகும். அகத்திணை மாந்தர்களுள் தலைவன் தலைவி இருவருக்கும் இக்கூற்று உரியது.

பிரிவுத்துயரத்தின் மிகுதியினால் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லும் முறையினை வைத்து, இந்நிலை நெஞ்சிற்குச் சொல்லியது, நெஞ்சினைக் கழறியது,

[5] முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : ragasudhamphil@gmail.com

[6] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது, நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது என அமையும். இத்தன்மை பிரிவின் காரணமாகவும் பிரிவின் நிமித்தம் காரணமாகவும் ஏற்படும்.

இலக்கிய உலகிற்கு, முதன்முதலில் உளப்பகுப்பாய்வுக் காட்பாட்டை அறிமுகப்படுத்தியவர் 'சிக்மண்ட ஃபிராய்டு' ஆவார். உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு என்பது ஆழ்மன உணர்வுகளை மனத்துள் புதைந்து கிடக்கும் விருப்பங்களை மும்மனச் செயல்பாடுகளின் வழி வெளிக்கொணரும் முறையாகும்.

ஃபிராய்டு மனச் செயல்பாடுகளை மனத்தின் ஆளுமை நிலையினைப் பண்படா உள்ளம் அல்லது இன்பமனம் (id) தன்முனைப்பு (ego) பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்) கொண்ட தன்முனைப்பு (Super ego) என்று மூன்றாகப் பிரிக்கிறார். கேல்வின் எஸ் ஆல் (Calvin S.Hall Gardner lindzey, Theories of personality, P.36).

**தலைவனின் பாலுணர்வாற்றலும் இன்பமனச் செயல்பாடுகளும்**

"சிக்மண்ட ஃபிராய்டு" இட் (id) என்ற பண்படா உள்ளத்தின் தூண்டல் ஆற்றல், லிபிடோ (libido) என்ற பாலுணர்வின் வயப்பட்டது, இந்த இயல்பூக்கம் உள்ளத்தின் ஆற்றலுக்கெல்லாம் தோற்றுவாயாக உள்ளது என்பார்.

இம்மனம் மரபுநிலையில் வந்த இயல்பூக்கங்கள் உந்துதல்கள் முதலியவற்றைக் கொண்டது. பிறப்பிலிருந்து இது இயல்பாக அமைகிறது என்று ஃபிராய்டு குறிப்பிடுகிறார். இது மனிதனின் ஆளுமையைப் புரிந்து கொள்ளமுடியாத ஒரு குழப்பமான பகுதியாகும். அதிரிச்சியூட்டும் உணர்ச்சியின் உறைவிடம் எத்தகைய அமைப்புமற்ற இன்பநிலை உணர்வுகளுக்கு ஏற்ப, இயல்பூக்கங்களின் தேவைகளுக்கு, நிறைவு தேடுகின்ற ஒரு தூண்டல் ஆற்றல் என்றும் உளவியலார் மனத்தின் இப்பகுதியை விளக்குவர்.

இங்கும் களவுக்காலத்தில் தலைவனின் நெஞ்சொடு கிளத்தலில் வரும் கூற்றுக்களில் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது.

உடனே தலைவியை அடையத் துடிக்கும் தலைவனின் விருப்ப விழைவே தலைவனின் எண்ணமாகப் புலப்படுகிறது. இங்குத் தோழியிடம் இரந்து நின்ற தலைவன், மறுத்துரைக்கப் பெற்ற நிலையில் தோழி அருளினும் அருளாளாயினும் முனியல் மா நெஞ்சே! என்று,

**"வெள்ளென்பு அணிந்து பிறர் எள்ளத் தோன்றி,**
**ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி,**
**தெருவின் இயலவும் தருவது கொல்லோ –**
**கலிழ்கவின் அசைநடைப் பேதை**
**மெலிந்திலள் நாம்விடற்கு அமைந்த தூதே"(குறுந்.182)**

தலைவன் ஊரில் உள்ள பிறர் இகழுமாறு மடலேறுவதாக அமைந்த பாடல் இது ஆகும். தலைவன் இந்நிலையில் தலைவியின் நலன் பெரிது என்று நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கூறித் தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றான்.

'இட்' என்ற பண்படா உளள்ம் இன்ப உணர்வுகளுக்கு நிறைவு தேடுகின்ற தன்மையுடையது. இன்ப இயல்பூக்கங்களுக்கு உடனே நிறைவு அளித்தலே 'இட்டின் இயல்பாகும்.

இங்கும் களவுக்காலத்தில் தலைவியுடன் கூடி இன்பம் துய்க்க எண்ணும் தலைவனின் பாலுணர்வாற்றலே வெளிப்படுகிறது.

**தன்முனைப்புள்ளம்**

**'தன்முனைப்பு'**என்பது யதார்த்த மனமே ஆகும். மனிதனின் இயல்பு நிலையில் உள்ள உண்மை நிலையை உணர்த்தி, அவனது பண்படா உள்ளத்து ஆசைகளை நிறைவேற்றி வைப்பது தன்முனைப்பாகும்.

பாலுணர்வால் எழும் தேவைகளை உடனுக்குடன் அடைய வேண்டும் என்று பண்படா உள்ளத்தில் ஆசைகள் எழலாம். அதுபோன்ற உணர்வுகளை ஆசைகளை உடனுக்குடன் அடைய விடாது அவ்வுணர்வுகள், ஆசைகள் முதலியவற்றைச் சந்தர்ப்பங்களுடன் இணைத்து வாழ்வின் சட்ட திட்டங்களுக்கு ஏற்றவாறு செயல்படுத்துவது தன்முனைப்பாகும்.

பண்படா உள்ளத்திற்கும் மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்பிற்கும்**(Super ego)** பொறுப்பாளராக இருந்து செயல்படுத்துவது தன்முனைப்பாகும். இங்குத் தலைவனின் பாலுணர்வாற்றலுக்கும் தன்முனைப்பிற்கும் இடையில் போராட்டம் நிகழ்கிறது.

தலைவனின் ஆளுமைத் தன்மை பொருளீட்டுவதுதான். பொருளின்மையால் வரும் இளிவு தாங்கிக் கொள்ளாது என்று அவன் மனம் ஒருபுறம் எண்ணுகிறது. எனினும் அவள் மீதுள்ள உணர்வுவயப்பட்ட அன்புணர்வு இளிவரவைக் கூட ஏற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. இதனை,

**"மருந்து எனின் மருந்தே வைப்புஎனின் வைப்பே**

**அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை**
**பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்**
**கல்கெழு கானவர் நல்குறு மகளே" (குறுந்.71)**

ஆள்வினைக்கு அகல்வோம் எனினும், மீள்வோம் ஆயினும் நீ துணிந்ததுவே என்று தலைவன் செலவு தவிர்த்தலுக்கு நெஞ்சைக் காரணமாக்குகிறான். எனினும் தலைவியை விட்டு மீளவும் முடியாது, ஆள்வினை ஆற்றவும் முடியாது கலங்குகிறான். இந்நிலையில்தான் **'தேய்புரிப் பழங்கயிறு போல வீயும் என் உடம்பு'** என்கிறான்.

இங்குத் தலைவனின் நனவுமனச் செயல்பாடு வெளிப்படுகிறது. காதலுக்கும் கடமைக்கும் அறிவுக்கும் பாலுணர்வாற்றலுக்கும் போராட்டம் நிகழ்கிறது.

அகப்பாடலில் வரும் தலைவன் தலைவியர் எல்லாம் இளம்பருவத்தினர் ஆவர். இதைக் குறுமகள், மடமகள் என்ற சொற்களால் அறியலாம். இளையோர் பருவ வயதில் கட்டுக்கடங்காத மனவெழுச்சிகளைப் பெற்றிருப்பர் என்று உளவியலார் கூறுவர். இங்கும் இளம் பருவத்தினனான தலைவனின் பாலுணர்வாற்றல் கட்டுப்படாத நிலையிலேயே அத்தலைவனின் தன்முனைப்பு வெளிப்பாடு உள்ளது.

ஒரு பக்கம் பொருளீட்டும் ஆர்வம், மறுபக்கம் தலைவியின் நலன் குறித்த இன்பமும் வருத்த, நெஞ்சைக் காரணமாக்கிப் பொருட்செலவைத் தவிர்த்து இல்லத்தில் தங்குகிறான். தலைவனின் பாலுணுர்வாற்றலும் இளம் பருவத்து உணர்வும் இணைந்த மனச்செயல்பாடே, தலைவனின் தன்முனைப்பு வெளிப்பாடாகப் புலப்படுகின்றது.

இங்குத் தலைவனின் பொருள்வயிற் பிரிவைக் கட்டுப்படுத்த முனைகிறது தன்முனைப்பு உள்ளம்.

**பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்)**

பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பானது பெற்றோர்களாலும், சமூகத்தாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகள், சமய மதிப்புகள் அடங்கிய பகுதியாகும். தன்முனைப்பின் விருப்பங்கள், ஆசைகள் முதலியவை சமூகச் செயல்பாடுகளுக்கு ஏற்றவை தானா என்று தீர்மானித்துச் செயல்பட வைப்பது இவ்வுள்ளமாகும்.

தன்முனைப்பு இன்பத்தை நாடுகிறது. பண்பட்ட உள்ளம் அறநெறியை வற்புறுத்துகிறது. இவ்வாறு தன்முனைப்பின் ஆசைகளை நிறைவேற்றுவதில் இரண்டிற்கும் இடையில் ஒரு போராட்டம் நிகழும்.

முன்னர்க் குறித்த தொடர்கள் எல்லாம் இப்போராட்ட உணர்வுகளையே சுட்டுகின்றன. ஏனெனில் இம்மூன்று மன உணர்வுகளையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. இப்போராட்ட உணர்வுகள் எல்லாம் பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பு செயல்படாதவாறு அன்புணர்வும் காதல் உணர்வும் கலந்த தன்முனைப்பு வெளிப்பாடு மேலோங்கி நிற்க, தலைவன் செலவைத் தற்காலிகமாகத் தவிர்த்த நிலையில் இருக்கிறான்.

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்**
**அம்மா அரிவையும் வருமோ?**
**எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே! (குறுந்.63)**

இப்பாடலில், வினை முடித்தலுக்குக் காரணமே அவள் வயப்பட்ட மனம்தான் என்கிறான்.

இங்கு இன்ப இயல்பூக்கம் கொண்ட தன்முனைப்பிலேயே தன்னை இருத்திவிடாது, பொருளீட்டுதலே தனக்குரிய வினை, இச்செயலை முடித்துவிட்ட மனநிலையைச் சொல்லித் தலைவன் மனநிறைவடைகிறான். தலைவனின் மனம் தலைவியின் உடன் சென்றாலும், பொருளீட்டுதலைத் துணிந்த மனத்தை அதைத் தவிர்த்தல் இழிவு தரும் என்று அவன் அறிவு உறுதிப்படுத்துகிறது.

முன்பு செலவழுங்குவித்த நிலையில் இளிவரலைக் கூடத் தாங்க எண்ணியது அவனுடைய மனம். ஆனால் பொருளீட்டத் துணிந்த நிலையில் அவனது உண்மையான பண்பட்ட உள்ளம் கொண்ட தன்முனைப்பு வெளிப்படுகிறது. பண்பட்ட உள்ளம் இங்குத் தலைவனின் மனச்செயல்பாடுகளில் வாழ்க்கை அறநெறிகளை உணர்த்தி அவனைச் சமநிலைப்படுத்தி, பொருளீட்டும் கடமை உணர்விற்கு இட்டுச் செல்கிறது.

ஃபிராய்டு மனச் செயயல்பாடுகளை, ஆழ்மன விருப்பங்களை வெளிக்கொணரும் நிலைகளை உளப்பகுப்பாய்வில் விளக்குகிறார். நெஞ்சொடு கிளத்தலில் வரும் தலைவனின் ஆழ்மன விருப்பம் பொருளீட்டுதலே ஆகும். 'வினையே ஆடவர்க்குயிரே' என்பது சங்க இலக்கிய மரபு. இம்மரபின் உணர்வோட்டங்களே நெஞ்சொடு கிளத்தலில் வரும் தலைவனின் மனச் செயல்பாடுகளில் வெளிப்படுகின்றன.

தலைவன் தலைவியிடம் பெறும் இன்பத்தை நினைக்கும் நிலை 'இட்' என்ற பாலுணர்வாற்றல் ஆகும். பண்படா உள்ளச் செயல்பாடாகும்.

தலைவனின் பிரிவுத்துயரைக் காரணப்படுத்தி அவளால் பெறும் இன்பத்தில் நாட்டம் செலுத்த முனைகிறது தலைவனின் தன்முனைப்பு. ஆனால் தலைவனின் பண்பட்ட உள்ளம் அவனது வாழ்க்கை மேம்பாடுகளைச் செம்மைப்படுத்தி அறநெறிகளை உணர்த்தி, அவனைப் போராட்ட மன நிலையிலிருந்து விடுவித்து சமநிலைப்படுத்துகிறது.

இவ்வாறு தலைவனின் நெஞ்சொடுகிளத்தலாக வரும் கூற்றுக்களில் எல்லாம் அவனது மும்மனச் செயல்பாடுகளும் வெளிப்படுகின்றன. அச்செயல்பாடுகளுள் பொருளீட்டுவதுதான் தலைவனின் ஆளுமைத்திறன் என்ற தலைவனது ஆழ்மன விருப்பம் வெளிப்படுகிறது. ஆழ்மன விருப்பத்தை, நெறிப்படுத்திக் கடமையாற்ற வைப்பது பண்பட்ட உள்ளம் (மேம்பாட்டுள்ளம்) கொண்ட தன்முனைப்பாகும். இங்குச் சங்கத் தலைவன் 'மேம்பாட்டுள்ளம் கொண்ட தன்முனைப்புப்' பெற்றவன் என்பதை உய்த்துணர முடிகிறது.

**துணைநின்றவை**

சாரதாம்பாள்.செ. (2004). *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.* மதுரை: வைகை பதிப்பகம்.

நாகராசன்.வி., உ. (2014). *குறுந்தொகை – மூலமும் உரையும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

பகவதி.கு. (2007). *திறனாய்வு அணுகுமுறைகள்.* சென்னை: உலகத்தமிழராய்ச்சி நிறுவனம்.

இனம் : பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
இனம் இனத்தைச் சேரும்
INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES